# யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2017

## தமிழ்

| சுட்டெண் ........................ | தரம் :- 10 | நேரம் : 1.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

01. "மூடருக்கும் பேடருக்கும் முதியோர்------" இங்கு இடம்பெற்ற "பேடர்" என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்

1) முதியவர் 2) பேடர் 3) அறிவிலிகள் 4) பெரியோர்

02. அணிந்து வரும் சமரில் எதிர்த்து அரவு ------" இங்கு "சமர்" என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்

1) களம் 2) சவாரி 3) சமன் 4) போர்

03. புலவர் மணியின் மொழிநடை எளிமையானது. இதில் "எளிமை" என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்

1) கடினம் 2) அழகு 3) இரக்கம் 4) வறுமை

04. "வேடன் புறாக்களை வேட்டையாடினான்" இதில் வேடன் என்பதன் எதிர்பாற்சொல்

1) வேடுவச்சி 2) வேடச்சி 3) வேட்டைச்சி 4) வேடுவிச்சி

05. குழுக்களுக்கிடையே இரகசிய பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதில் இரகசியம் என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்

1) மறைவு 2) ஒழிவு 3) பரகசியம் 4) பரமரகசியம்

06. ஆடு கத்தும் என்பது போல பன்றி

1) கத்தும் 2) கதறும் 3) உறுமும் 4) சத்தமிடும்

07. கப்பல் செலுத்துபவன் மீகாமன் என்பது போல வானவூர்தி செலுத்துபவ்ன்

1) ஓட்டுநர் 2) வலவன் 3) சாரதி 4) கலவன்

08. முருகியல் பற்றிய உயர்வு வாழ்வில் அவசியமானது முருகியல் என்பது

1) அழகியல் 2) மனையியல் 3) நாடகவியல் 4) புவியியல்

09. சீயாக்காய் வைத்து குளிப்பது பண்டைய மரபு. சீயாக்காய் என்பதன் திருத்தமான வடிவம்

1) சிசுக்காய் 2) சிகைக்காய் 3) சிசிக்காய் 4) சியக்காய்

10. பகையுமின்றி நட்புமின்றி நடு நிலையில் நிற்போர்

1) நீதிபதி 2) நடுவர் 3) நொதுமலர் 4) புதுமலர்

11. தப்பித்தவறியும் பொய் பேசுவது தீமை தரும் - தப்புத்தவறியும் என்பது

1) அடுக்குத்தொடர் 2) அடுக்கிடுக்குத்தொடர்
3) இணைமொழி 4) இரட்டைக்கிளவி

kalvi.lk

12. எண்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா

1) முத்துவிழா　2) மணிவிழா　3) பவளவிழா　4) அமுதவிழா

13. உள்ளதை உள்ளபடி சொன்னால் பலரைப் பகைத்துக் கொள்ள வேண்டி வரும் எனும் கருத்துள்ள பழமொழி

1) ஊர் வாயை மூட உலை மூடி இல்லை

2) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்

3) எதார்த்தவாதி வெகுசன விரோதி

4) கெடுகுடி சொற் கேளாது.

14. அவன் இந்திஜாலக்காரன். இந்திரஜாலம் என்ற மரபுத் தொடரின் பொருள்

1) வித்தை காட்டுபவன்　2) ஏமாற்றும் தன்மையுடையவன்

3) நன்மை செய்பவன்　4) தீமை செய்பவன்

15. கோள்களுள் மிகப் பெரியது வியாழன் என விஞ்ஞானி கூறுவர். இங்கு வந்துள்ள என என்பது

1) பெயர்ச்சொல்　2) வினைச்சொல்　3) உரிச்சொல்　4) இடைச்சொல்

16. Cristim என்ற கலைச் சொல்லின் பொருள்

1) திறனாய்வு　2) நிலைப்பேழை　3) சாகியம்　4) அதிதி

17. தரவை என்பது

1) கிழக்கு பிரதேச வழக்கு　2) வடக்கு பிரதேச வழக்கு

3) மேற்கு பிரதேச வழக்கு　4) தெற்கு பிரதேச வழக்கு

18. துட்டு என்பது

1) ஆங்கிலம்　2) டச்சுமொழி　3) பிரெஞ்சுமொழி　4) அரபுமொழி

19. அவன் ஒழுக்கமுள்ளவனாக இருந்து கற்றதனால் உயர் பெறுபேற்றை பெற்றுக் கொண்டான். இங்கு அவன் என்பது

1) பெயர்ச்சொல்　2) வினையாலணையும் பெயர்

3) மாற்றுப் பெயர்　4) காரணப்பெயர்

20. உம்மிலை எனக்கு மரியாதை இருக்கு – உம்மிலை என்பதன் திருத்தமான வடிவம்

1) உங்களில்　2) உன்மேல்　3) உங்கள்　4) உமது

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் பகுபத உறுப்புக்கள் ஆறும் இடம்பெற்ற சொல்

1) நடந்தான்　2) சிரித்தான்　3) அழுதனன்　4) விழுந்தனன்

22. காப்புக்குத்தங்கம் உருக்கினான் இவ்வாக்கியத்துக்குரிய வேற்றுமைப்பொருள்

1) நிமித்தகாரணம்　2) முதற்காரணம்　3) தகுதி　4) ஆக்கல்

Education கல்வி

23. பின்வருவனவற்றுள் உம்மைத்தொகை

1) கரும்பலகை 2) மதிமுகம் 3) இரவுபகல் 4) வட்டப்பொட்டு

24. தாழ்குழல் வந்தாள் என்பது

1) உவமைத்தொகை 2) வினைத்தொகை 3) வினைமுற்றுத்தொடர் 4) வேற்றுமைத்தொடர்

25. பார்த்து இரசித்தனர் என்பது

1) பெயரெச்சத்தொடர் 2) வினையெச்சத்தொடர்

3) வினைமுற்றுத்தொடர் 4) வேற்றுமைத்தொடர்

26. பிள்ளைக்கனியமுதே கண்ணம்மா இதில் வந்துள்ள அணி

1) உவமை 2) உருவகம் 3) உயர்வுநவிற்சி அணி 4) தற்குறிப்பேற்ற அணி

27. வாட்பட்டை கொண்டு வையம் காத்தான் - வாட்பட்டை என்பதில் இடம்பெற்ற விகாரம்

1) திரிதல் 2) தோன்றல் 3) கெடுதல் 4) இயல்பு

28. வெளிப்படை பொருளில் புகழ்ந்தும் மறை பொருளில் இகழ்ந்தும் கூறுவது

1) இரட்டைக்கிளவி 2) அங்கதம் 3) மடக்கு 4) கீர்த்தி

29. புக்கான் என்ற சொல்லின் பகுதி

1) புக்கு 2) புக்கா 3) புக் 4) புகு

30. இவ்வீட்டில் யாருமே இல்லையா? இவ்வீடு என்பது

1) புறச்சுட்டு 2) அகச்சுட்டு 3) பெயர்ச்சொல் 4) பெயரடை

**புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. கொடிய நோயான பன்றிக் காய்ச்சல் பற்றிய ------------------------------------ மக்களுக்குத் தேவை

1) நம்பிக்கை 2) பிரசுரம் 3) விழிப்புணர்வு 4) அறிவித்தல்

32. வரவு செலவுத் திட்டத்தில் ----------------------------------- மிகுதியாக இருந்தது.

1) வரவு 2) செலவு 3) துண்டுவிழும் தொகை 4) இலாபம்

33. சிறுகதை பற்றிய ------------------------------ எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது

1) விமர்சனம் 2) கணிப்பீடு 3) ஊக்குவிப்பு 4) பார்வை

34. மான்கள் கூட்டமாக மலை அடிவாரத்தில் ----------------------------------------------

1) திரிந்தன 2) திரிகிறது 3) திரியும் 4) திரிவன

35. பாடசாலை உயர்விற்கு ஆசிரியர்களது -------------------------------------- தேவை எனக் கூறினார் அதிபர்

1) சேவை 2) ஒத்துழைப்பு 3) அறிவு 4) ஒழுக்கம்

நட்சத்திரத் தோழியாக

நாற்புறமும் தொடர்ந்து வர

நடுவே முகிற்றிரையால்

முகம் மறைத்து

என் தலைவன்.

விண்ணரசன் பாதங்களில்

வணங்கவரும் என்னைக்

கன்னி என்று எண்ணியோ

கவிதை நீ புனைத்தாய்

36. இப்பாடலில் உரையாடுவது

1) சூரியன் 2) சந்திரன் 3) நட்சத்திரம் 4) கோள்கள்

37. இப்பாடலில் வரும் புறம் என்ற சொல்லுக்கான எதிர்க்கருத்துள்ள சொல்

1) அகம் 2) வெளியே 3) உள்ளே 4) அறம்

38. இங்கு வந்துள்ள அணி

1) உவமானம் 2) உருவகம் 3) சிலேடை 4) மடக்கு

39. நடுவே முகிற்றிரையால் முகம் பார்க்க என்பதில் இடம்பெற்ற இடைச்சொற்களுள் ஒன்று

1) நடு 2) ஏ 3) வே 4) முகில்

40. ஒழுங்கின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் ஒழுங்குற அமையும் ஒழுங்கு

அ. அது மனித குலத்திற்குப் போதுமானது.

ஆ. சினிமாமொழி மொழி பெயர்க்க முடியாத ஒன்று

இ. இப்போது சினிமாமொழி நமக்கு பரீட்சய மில்லாத ஒன்றாக இருக்கின்றது.

ஈ. அங்கிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாததற்கு நம் பரீட்சய மின்மை தான் காரணம்

உ. மற்ற நாடுகளில் இம்மொழி வளர்ந்து கொண்டிருக்கிறது

1) இ, ஈ, ஆ, அ, உ 2) இ, உ, ஈ, ஆ, அ

3) ஆ, அ, உ, இ, ஈ 4) இ, ஆ, அ, ஈ, உ


kalvi.lk

## பகுதி II

01. சுருக்கமான விடை தருக.

1) 'கண்டே களித்தங் குறவாடி' எனும் அடியைச் சந்தி பிரித்து எழுதுக?
2) கட்டுரையில் அமைய வேண்டிய விடயங்களுள் இரண்டினைத் தருக?
3) "கரைந்தான்" என்ற சொல்லை பிறவினைச் சொல்லாக மாற்றி எழுதுக?
4) "எங்கள் சொத்து எங்கள் பிள்ளைகள்" என்பது எவ்வகை வழுவமைதி என எழுதுக?
5) நாடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையக்கூடிய வகையில் தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக?
6) ஆடுபோல் தாவித்தாவி பலபொருள் நாடுவோர் -------- என்பதில் கையாளப்பட்ட அணியை விளக்குக?
7) பெயரெச்சம் என்றால் என்ன உதாரணம் தருக?
8) தொழில்முறைக்கடிதம் ஒன்றில் இடம்பெறும் உறுப்புக்களை ஒழுங்குற எழுதுக?
9) இறைவனுடைய பாதங்களைப் பணியாவிடில் நாம் கற்கும் கல்வியின் பயன்தான் என்ன? இதன் சுருக்க வடிவத்தை எழுதுக?
10) அவருக்கு மருத்துவத்தில் அனுபவம் உண்டு இதன் வேற்றுமையையும் அதன் பொருளையும் எழுதுக?

(10× 2 = 20புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 200–250 சொற்களில் வரைக.

அ. இன்று ஒவ்வொருவருக்கும் சுயகட்டுப்பாடு அவசியமானதொன்றாக கருதப்படுகிறது. சுய கட்டுப்பாட்டுடன் வளரும் பிள்ளை ஒன்றினாலேயே எந்த ஒரு சூழலிலும் தன்னை நிலைநிறுத்தி வாழ முடியும் பிறரின் கட்டுப்பாட்டில் வளரும் பிள்ளையானது அக்கட்டுப்பாட்டை மீறவேண்டும் என்ற துடிப்புடன் இருக்கும். இதனால் சமநிலை பாதிப்படையும் எனவே சுயகட்டுப்பாட்டுடன் வளரும் வகையில் வழிப்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி விளக்கக்கட்டுரை வரைக.

ஆ. மனிதகுலத்தின் இயல்பு வாழ்க்கைக்கு பெரிதும் அச்சுறுத்தலாக காலநிலை மாற்றமும் இயற்கை அனர்த்தங்களும் காணப்படுகின்றன. மனித நடவடிக்கைகளே இவற்றுக்கும் பெரிதும் காரணங்களாக அமைகின்றன. அதனை உணர்த்தும் வகையில் இருவருக்கிடையில் அக்கருத்தை ஆதரித்தும் எதிர்த்தும் நடைபெறும் உரையாடல்

இ. சிறுவயதிலேயே தந்தையை இழந்த சீலன், தாய் சகோதரிகளைத் தாங்க வேண்டிய பொறுப்புக்குள்ளாகிறான். உறவுகள் ஒதுக்கி விடுகின்றன. ஆயினும் ஆசிரியர் வழிகாட்டலால் கல்வியில் உயர்நிலையை அடைகின்றான் என்பதனைக் கருவாகக் கொண்டு சிறுகதை எழுதி, தலைப்பும் இடுக.

(25புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைநடைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.

முன்னொரு காலத்தில் ஆதிக்கம் செலுத்திய சிலரின் வல்லமையாக மொழி இருந்தது. இன்று வெகுசனங்களின் ஊடகமாக அது வளர்ந்துள்ளது. சாதாரண மக்களின் பேச்சு வழக்குகளும் இன்று இழிந்தொதுக்கப்படுவதில்லை. பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்தும் உதவியும் வருகின்றன. கூடியளவு மக்களுக்கு கருத்துக்களையும் அனுபவங்களையும் எடுத்துச் சொல்லத்தக்க கருவியாக மொழியை வளர்க்கும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. கலை இலக்கியங்களைப் பொறுத்த வரையில் அவை மக்களின் வாழ்வை வளம்படுத்த உதவுவனவாக இருக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கியுள்ளது. இறைவனையும் மேன்மக்களையும் சித்திரித்த பழைய இலக்கியங்களைப் போலன்றி புதிய இலக்கியங்கள் சாதாரண மக்கள் வாழ்வினைப் பிரதிபலிக்கின்றன. அவர்களின் பெருமைகளையும் சிறுமைகளையும் யதார்த்தமாக நோக்குகின்றன. "மானிடத்தைப் பாடோம்" என்ற காலம் மாறிவிட்டது. தமிழ் இலக்கியத்துக்கு தேசிய இலக்கியங்களும் பிரதேச இலக்கியங்களும் புதிய பரிமாணங்கள் அளித்துள்ளன.

(10புள்ளிகள்)

kalvi.lk

04. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியத்தில் விடை எழுதுக.

சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டையுலகிதனை
ஊதையில் துரும்பு போல் அலைக்கழிப்போம் - பின்னர்
ஒழித்திடுவோம். புதியதோர் உலகம் செய்வோம்
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசு சுயமரியாதை உலகு என பேர் வைப்போம்
ஈதே காண்! சமூகமே யாம் சொன்ன வழியில்
ஏறு நீ ஏறுநீ ஏறுநீ ஏறே.

1) கவிஞர் சிருஷ்டிக்க விரும்பும் உலகிற்கு வைக்க விரும்பும் பெயர் யாது?
2) தாம் வாழ்ந்த காலத்து உலகிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியவை எவை எனக் கவிஞர் கூறுகின்றார்?
3) கவிஞர் இக்கவிதையில் எத்தகைய உணர்வினை வெளிப்படுத்தியுள்ளார்?
4) இப்பாடலில் இடம்பெற்ற அணியை விளக்குக?
5) சமூகத்தை எவ்வழியில் இட்டுச்செல்ல வேண்டும் என கவிஞர் கூறுகின்றார்?

(2× 5 = 10புள்ளிகள்)

05. 1) உமது பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக உமது பிரதேச சபைத்தலைவருக்கு (பிரதேச செயலருக்கு) ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

2) டெங்கு என்ற ஆட்கொல்லி நோய் தீவிரமாகப் பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டி சூழலை சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தை வலியுறுத்தி 100 சொற்களில் துண்டுப்பிரசுரம் எழுதுக.

(15புள்ளிகள்)

## பகுதி – III

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

**1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை தருக.**

01. சுருக்க விடை தருக.

1) 'பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லர்'

அ) இவ்வாக்கியம் உணர்த்தும் பொருள் யாது?

ஆ) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

2) 'கற்றார் முன்கல்வி உரைத்தல்'

அ) இப்பாடலில் வரும் இனிய செயல்கள் எவை?

ஆ) இப்பாடல் இடம்பெற்ற நூற்தொகுதி எது?

3) 'உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை'

அ) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

ஆ) இப்பாடலின் ஆசிரியர் எழுதிய பிறநூல்கள் இரண்டு கூறுக?

4) 'அடக்குமுடையார் அறிவிலர்'

அ) இப்பாடல் இடம்பெற்ற நூலுக்கான இரு பெயர்களையும் கூறுக?

ஆ) இப்பாடலில் இடம்பெற்ற அணி யாது?

5) 'விலகு பிள்ளை'

அ) இதனை வழமையாக குறிப்பிடுபவர் யார்?

ஆ) பீ. ஏ பரீட்சையில் சித்தியடைந்த முதல் இரு யாழ்ப்பாணத்தவரைக் குறிப்பிடுக?

6) 'பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி'

அ) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

ஆ) இப்பாடலை ஆசிரியர் யாருக்காக குறிப்பிட்டார்?

7) ' தந்தி தபாற் கட்டுக்களை எடுத்து வா'

அ) யாரால் யாருக்கு கூறப்பட்டது?

ஆ) இதனால் அச்சமைந்தவர் யார்?

8) அ) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?

ஆ) அக்கட்டுரை எந்த நூலில் இடம்பெற்றது?

9) அ) பாரதியார் பணிபுரிந்த இரு பத்திரிகைகளைக் குறிப்பிடுக?

ஆ) பாரதியாரின் முப்பெரும் இலக்கியங்களும் எவை?

10) 'விலங்கியற்கை இல்லையெனில்'

அ) 'விலங்கியற்கை' என்பதன் பொருள் யாது?

ஆ) விண்ணுலகடையும் வழி எதுவெனக் கூறப்படுகிறது? (20புள்ளிகள்)

02. 1) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

அ) இப்பாடலின் மையப்பொருளை எழுதுக?

ஆ) அணிச்சிறப்பை விளக்குக?

2) கணக்காலரில்லாதவூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும் - பார்த்துண்ணும்
தன்மையிலாளரய லிரும்புமிம்மூன்று
நன்மை பயத்தலில.

அ) நன்மை தராதன எவை?

ஆ) கணக்காயர் என்பதன் பொருள் யாது?

3) ‘காத்திருந்தவள் போம் வழிமுற்றிலும்
கண்கள் பின்னழ கார்ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலுமாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தையோ டேகி யதில் மகிழ்
கொண்டு நாள்கள் பல கழித்திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல்
புலனழித்தொரு புத்துயி ரெய்துவேன்’

அ) இப்பாடலில் பாரதியார் நாட்களை கழித்த விதம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
ஆ) அணிச்சிறப்பை எழுதுக?

(20 புள்ளிகள்)

3) நீதிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ) அதிவீர ராம பாண்டியன் பாடலில் புலப்படுத்தப்படும் கருத்து யாது?
ஆ) நன்மை பயக்காதவை எவை என நல்லாதனார் கூறுகின்றார்?

(15 புள்ளிகள்)

4) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்
அ) நாவலரின் எழுச்சியையும் நடந்து சென்ற விதத்தினையும் கம்பராமாயணப் பாடல் அடிகளுடன் தொடர்புபடுத்தி ஆசிரியர் விளக்குமாற்றை எழுதுக?
ஆ) பிறிற்றோவின் நேர்மையீனம், அவரது கட்சிக்காரரின் தோல்வி நிலை எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

(15புள்ளிகள்)

5) நீதீப்பாடல்களில் எடுத்துரைக்கப்பட்ட விழுமியக் கருத்துக்களை விளக்குக?

(10 புள்ளிகள்)

6) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில் கூட்ட நடவடிக்கைகள் விபரிக்கப்பட்டிருக்கும் ஆற்றை விளக்குக?

(10 புள்ளிகள்)

7) பாரதியார் சுயசரிதை என்ற பாடல் பகுதியை ஆதரமாகக் கொண்டு விடை தருக.
அ) ஒருவர் தாம் விரும்புவதை அடைதற்கும் அடைய முடியாமற் போதற்குமான வழிகள் காரணங்கள் எவை எனக் கூறுகின்றார்?
ஆ) தாம் விரும்பியதை அடைய முடியாதவர் இயல்புகளாக எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

(10புள்ளிகள்)

kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page